### *சட்டப்பயன் பற்றிய கூற்று*

***வாசகம் 2:*** *இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அதன் (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட குற்றப்பணத்தை அதிகரிப்பதும், தொடர்ச்சியான தவறொன்றுக்காக ஒரு தொழில்தருநர்மீது மேலதிகக் குற்றப்பணமொன்றை விதிப்பதும் தொழில்தருநரொருவரின் தவறுகையிலுள்ள பணத்தொகை நீதிமன்றத்தினால் அறவிடப்படுவதற்காக ஏற்பாடு செய்வதுமாகும்.*

***வாசகம் 3:*** *இவ்வாசகம், (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட குற்றப் பணத்தை அதிகரிப்பதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.*

***வாசகம் 4:*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ மற்றும் 10ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தைத் திருத்துவதுடன், நீதிவான் நீதிமன்றத்தின் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியின் கட்டளைக்கெதிராக மேல் நீதிமன்றத்துக்கான விண்ணப்பமொன்று மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான மேன்முறையீடொன்று தொடர்பில் தொழல்தருநரினால் காசுப் பிணைப்பொறுப்பொன்று கொடுத்துதவப்படுவதற்காகப் புதிய பிரிவுகளை ஏற்பாடு செய்கின்றதாகும்.*

***வாசகம் 5:*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட குற்றப் பணத்தை அதிகரிப்பதற்கு அப்பிரிவைத் திருத்துவதாகும்.*

